## பேரறிஞர் அண்ணா 118வது பிறந்த நாள்!

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, வள்ளுவர் கோட்டத்திற்கு அருகே உள்ள பேரறிஞர் அண்ணா திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிக்கின்றார்.

### சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிக்கை!



பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் 118வது ஆண்டு பிறந்த நாளான இன்று (15.9.2026) காலை 9.00 மணி அளவில் சென்னை, வள்ளுவர் கோட்டம் அருகே உள்ள பேரறிஞர் அண்ணா திருவுருவச் சிலைக்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் மற்றும் கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு உள்ளிட்ட கழக முன்னணியினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகின்றனர்.

கழக முன்னாள் அமைச்சர் பெருமக்கள், முன்னாள் - இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, இலக்கிய அணி, மாற்றுத் திறனாளிகள் அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, மீனவர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மகளிர் தொண்டர் அணி, கலை,இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல்தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, கல்வியாளர்கள் அணி ஆகிய அனைத்து அணி நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.


**நே.சிற்றரசு**
செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

## மேட்டூர் அணை நீர்மட்டம் 88.5 அடியாக சரிவு!

மேட்டூர், செப்.15-

ஒகேனக்கல் காவிரியில் நேற்று முன்தினம் விநாடிக்கு 7,000 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று காலை 8,000 கனஅடியாக அதிகரித்தது. இதனால், ஆற்றில் நீர் வரத்து அதிகரிப்பால் பரிசல் இயக்க மாவட்ட நிர்வாகம் தடை விதித்துள்ளது. மேட்டூர் அணைக்கு நேற்று முன்தினம் விநாடிக்கு 2,495 கன அடியாக இருந்த நீர்வரத்து நேற்று காலை 5,227 கனஅடியாக அதிகரித்தது.

அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்திற்காக விநாடிக்கு 12,000 கனஅடி வீதமும், கிழக்குமேற்கு கால்வாயில் குடிநீர் தேவைக்காக 400 கனஅடி வீதமும் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. வரத்தை காட்டிலும் நீர் திறப்பு அதிகமாக இருப்பதால், அணையின் நீர்மட்டம் வேகமாக சரிந்து வருகிறது. நேற்று முன்தினம் காலை 88.83 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் நேற்று காலை 88.52 அடியாக சரிந்தது. நீர் இருப்பு 50.97 டிஎம்சியாக உள்ளது.



"அற்பனை"த் தூக்கி வந்து "அவை " நடுவே வைத்தால், அவன் "அவை அறிதல்" என்ன விலை என்றுதானே கேட்பான்?

...முத்தமிழறிஞர் கலைஞர்.....

### ஜோசியர் சொல்வதை செயல்படுத்துகிற த.வெ.க. ஆட்சி!

# இரண்டு இடைத் தேர்தலிலும் தி.மு.க.வின் வெற்றி சிறகடித்து வரும்!

## கழக பொதுச் செயலாளர் துரைமுருகன் பேட்டி!

**காட்பாடி, செப். 15-**

**த.வெ.க. கட்சி ஜோசியர் சொல்வதை செயல்படுத்துகிற ஆட்சி என்றும், மதுராந்தகம், தாராபுரம் தொகுதி இடைத் தேர்தல்களிலும் தி.மு.க. கூட்டணியினர் வெற்றி சிறகடித்து வரும் என்றும் கழக பொதுச்செயலாளர் துரைமுருகன் பேட்டியளித்தார்.**



தி.மு.க. பொதுச்செயலாளரும் முன்னாள் அமைச்சருமான துரைமுருகன் அவர்கள், காட்பாடியில் தனது வீட்டில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது;-

சட்டசபையில் போலீஸ் மானியக் கோரிக்கை யின் போது மாநிலத்தில் நிலவும் சட்டம் ஒழுங்கு பிரச்சினை குறித்து பேசாமல், சர்க்காரியா, மிசா உள்ளிட்ட விவகாரங்களை முதல்வர் பேசியிருக்கிறார். அவர் குறிப்பிட்ட வழக்குகளில் பலரும் குற்றவாளிகள் அல்ல என்று கோர்ட்டில் விடுதலை செய்த பிறகு தான் அரசியல் செய்து வருகிறோம். இதையெல்லாம் படிக்க அவருக்கு நேரம் கிடையாது.

அதோடு எங்கள் தலைவர் குறித்த பேச்சுக்கு, அனைத்துக் கட்சிகளும் கண்டனம் தெரிவித்திருப்பது இதுவே முதல் முறை. சட்டசபையில் மரபையும் விதியையும் மீறி நடந்து கொண்டிருக்கிறார் முதல்வர். அதை சபாநாயகரும் தடுக்க தவறி விட்டார். இதை காரணம் காட்டி முதல்வர் மீது நடவடிக்கை எடுக்க எதிர்க்கட்சிகள் வலியுறுத்தலாம். சட்டசபையில் நடந்ததையும், கேட்ட கேள்விக்கு பதில் அளிக்காததையும் திசை திருப்பவே கே.என். நேரு வீட்டில் சோதனை நடத்தப்பட்டது. எங்களின் பெயர்களும் பட்டியலில் இருக்கிறதாம்.

நாங்கள் எத்தனையோ வழக்கை சந்தித்தவர்கள்.

முதல்வருக்கு தியாகம் என்றால் என்னவென்று தெரியாது. 15 நாட்கள் கூட சிறைக்கு சென்றது கிடையாது. அடிச்ச காற்றில் ஒரு இலை கோபுரத்துக்கு சென்றதன் விளைவு தான், இப்படி எல்லாம் அவர் பேசி வருகிறார். தியாகம் புரிந்தவர்களுக்கு தான் தியாகம் தெரியும். கம்யூனிஸ்ட் கட்சியினர் தியாகம் புரிந்தவர்கள். என்றைக்கும் தியாகம் செய்து கொண்டிருப்பவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியினர். பட்டினப்பாக்கத்தில் போக்குவரத்து பாதிக்கப்படும் என்பதால், அங்கு தலைமை செயலகம் கட்ட முடியாது. இந்த அரசாங்கம் அரசாங்கமாகவே இல்லை. முதல்வர், அமைச்சர்கள், அதிகாரிகளுடன் ஆலோசித்து நடவடிக்கை எடுப்பார்கள். ஆனால் இந்த ஆட்சி கூத்துக்காரன் போன்று, ஜோசியக்காரர் சொல்வதற்கு ஏற்றவாறு செயல்பட்டு வருகிறது. முதல்வர் சிறைக்கு செல்ல வாய்ப்புள்ளது என்பதால், முன் கூட்டியே சிறைக்கு சென்று வாருங்கள் என்று ஜோசியர் கூறியதால், புழல் சிறைக்கு சென்று வந்துள்ளார்.

இங்கிலாந்து நாட்டில் பெரிய பணக்கார கம்பெனி எதுவுமே கிடையாது. அங்கிருந்து எப்படி தொழில் முதலீடு கிடைக்கும். சவால் விடுகிறேன். அங்கிருந்து தொழில் முதலீட்டை கொண்டு வரச்சொல்லுங்கள் பார்க்கலாம்.

தமிழகத்தில் நடக்கும் 2 தொகுதிகளின் இடைத்தேர்தலிலும், தி.மு.க.வுக்கு வெற்றி சிறகடித்து வரும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு... முதல் பக்கத் தொடர்ச்சி

இன்னும் சொல்லப்போனால், கடந்த சட்டமன்றத் தேர்தலில் வெற்றி வாய்ப்பை நாம் இழந்திருக்கிறோம். ஆனால், இன்றைக்கும் ஒரு சிறப்பான எதிர்க்கட்சியாக, மக்களோடு நிற்கக்கூடிய ஒரு எதிர்க்கட்சியாக நாம் ஒவ்வொருவரும் இன்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

இன்று ஒவ்வொரு நாளும் இங்கு இருக்கக்கூடிய `டம்மி' ஆட்சியாளர்களால் மக்களாகிய அவர்கள் இன்று பல்வேறு பிரச்சினைகளைச் சந்தித்துக் கொண்டிருக் கிறார்கள். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பிரச்சினை வந்து கொண்டிருக்கின்றன. இன்று தமிழ்நாட்டில் பார்த்தீர்கள் என்றால், எங்கு பார்த்தாலும் மின்வெட்டு. சட்டம் ஒழுங்கு எப்படி இருக்கிறது என்று நான் உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை.

இந்த ஆட்சியில் அரிசி, பருப்பு என்று விலைவாசியும், அவற்றின் பற்றாக்குறையும் ஏறிக்கொண்டே இருக்கின்றன. ஆனால், இதைப் பற்றியெல்லாம் கேள்வி கேட்டால் இங்கு இருக்கக்கூடிய முதலமைச்சரால் பதில் சொல்ல முடியவில்லை. பதில் சொல்ல முடியாத காரணத்தால் நம் மீது, கழகத்தின் மீது, நம்முடைய தலைவர் மீது இன்று பல்வேறு அவதூறுகளை ஒவ்வொரு நாளும் கிளப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

**பெயரை மாற்றி செயல்படும் அரசு**

இன்று தமிழ்நாட்டினுடைய வரலாற்றிலேயே இப்படி ஒரு அநாகரிகமான, இப்படி ஒரு `டம்மி' முதலமைச்சரை நாம் அனைவரும் பார்த்ததே கிடையாது. வரலாற்றிலேயே இது தான் முதல்முறை. இந்த நான்கு மாதத்தில், ஆட்சிக்கு வரும்போது பல்வேறு வாக்குறுதிகளைச் சொல்லி ஆட்சிக்கு வந்தார்கள். இந்த நான்கு மாதத்தில் ஏதாவது ஒரு திட்டத்தை நிறைவேற்றி இருக்கிறார்களா என்று பார்த்தால் எதுவும் கிடையாது. நாம் கொண்டு வந்த, நம்முடைய தலைவர் முதலமைச்சராக இருக்கும்போது நம்முடைய திராவிட மாடல் அரசு கொண்டு வந்த திட்டங்களை எல்லாம், பெயரை மாற்றி இன்று இந்த அரசு செயல்பட்டுக் கொண்டி ருக்கிறது.

நம்முடைய அரசு கொண்டு வந்த அனைத்துத் திட்டங்கள் மீதும் ஸ்டிக்கர் ஒட்டி அவர்கள் கொண்டு வந்த மாதிரி பொய்யைப் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, அடுத்த கட்சி சட்டமன்ற உறுப்பினர்களை, விலைக்கு வாங்கி ஆட்சி அமைத்த காரணத்தால்தான் இன்று உங்களுக்குத் தெரியும் இரண்டு தொகுதிகளில் சட்டமன்ற இடைத் தேர்தல் வர இருக்கின்றது.

இந்த ஆட்சியாளர்களின் வீழ்ச்சிக்கு இந்த இடைத்தேர்தல் வெற்றி, ஒரு தொடக்கமாக இருக்க வேண்டும். அதற்கு நாம் அந்த உறுதிமொழியை ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த இடைத்தேர்தலில், இங்கு இருக்கக்கூடிய ஆட்சியாளர்களுக்கு, இந்த டம்மி முதலமைச்சருக்கு நாம் அத்தனை பேரும் சேர்ந்து ஒரு சரியான பாடத்தைப் புகட்ட வேண்டும்.

**தமிழ்ப்பெயர் சூட்டுங்கள்**

இந்த நேரத்தில் மணமக்களுக்கு ஒரு சிறிய வேண்டுகோள். ஒருவரை ஒருவர் புரிந்து நல்ல நண்பர்களாக நடந்து கொள்ளுங்கள். சுயமரியாதையுடன் விட்டுக் கொடுக்காமல் இணைந்து வாழுங்கள். உங்களுக்குப் பிறக்கின்ற குழந்தைகளுக்கு அது ஆண் குழந்தையாக இருந்தாலும் சரி, பெண் குழந்தையாக இருந்தாலும் சரி, ஒரு அழகான தமிழ்ப்பெயரைச் சூட்டிக்கொள்ள வேண்டும் என்று கூறிக்கொண்டு, இந்தத் திருமண விழாவிற்கு வருகை தந்திருக்கும் அத்தனை பேருக்கும் மீண்டும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்து, மணமக்களுக்கு நம்முடைய வாழ்த்துகளையும் தெரிவித்து, வாய்ப்பிற்கு நன்றி கூறிக் கொள்கிறேன்.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் வாழ்த்திப் பேசினார்.

**பங்கேற்றவர்கள்**

மாவட்டக் கழகச் செயலாளர் மா.சுப்பிரமணியன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பிரபாகர் ராஜா, மாவட்டப் பொருளாளர் வேளச்சேரி பாஸ்கரன், பகுதிக் கழகச் செயலாளர் ஆனந்தம், வட்டக் கழகச் செயலாளர்கள் கோபி, பார்த்திபன், மதிவாணன், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர் தரமணி சண்முக நாதன், சந்திரேஷ், தியாகராஜன், வழக்கறிஞர் அணி அமைப்பாளர் ஜெகதீசன், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் ராகுல், துணை அமைப்பாளர்கள் விஷ்வா, அருண் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.

### மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் போட்டியிடும் மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தல்! இன்று (செப்,15)

# கழக வேட்பாளர் இ.பரந்தாமன் வேட்பு மனு தாக்கல் செய்கிறார்!

## மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் அறிவிப்பு!

காஞ்சிபுரம், செப்.15-

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர் இ.பரந்தாமன் இன்று (செப்டம்பர் 15) மதுராந்தகத்தில் உள்ள டாக்டர் அம்பேத்கர், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோரின் திருஉருவச் சிலைகளுக்கு மாலை அணி வித்து மரியாதை செலுத்தி அங்கிருந்து ஊர்வலமாக புறப்பட்டு சென்று காலை 11 மணியளவில் மதுராந்தகம் வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடம் வேட்பு மனு தாக்கல் செய்கிறார்.

இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர், மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் செயலாளர்கள், மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர்க் கழக அணிகளின் நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் கலந்துகொண்டு நிகழ்ச்சியை சிறப்பிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் விடுத்துள்ள அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### 2026ம் ஆண்டிற்கான

# தமிழ்நாடு சுற்றுலா விருது!

## 30ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம்!

சென்னை, செப்.15–

தமிழ்நாடு சுற்றுலா துறை சார்பில் கடந்த 2022ம் ஆண்டு முதல் சுற்றுலாத் துறையின் மூலம் அனைத்து சுற்றுலா ஏற்பாட்டாளர்கள் சுற்றுலா தொழில் முனைவோர்கள் மற்றும் ஓட்டல் முகவர்களுக்கு தமிழ்நாடு சுற்றுலா விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த விண்ணப்பங்கள் (www.tntourismawards.com) இணைய தள முகவரி மூலம் விண்ணப்பிக்கலாம்.

தமிழ்நாட்டிற்கான சிறந்த சுற்றுலா ஏற்பாட்டாளர், சிறந்த உள்நாட்டுசுற்றுலா ஏற்பாட்டாளர், சிறந்த பயணபங்குதாரர், சிறந்த தங்குமிடம், சிறந்த உணவகம், தங்குமிடம் மற்றும் படகு இல்லம், சுற்றுலா ஊக்குவிப்பிற்கான சிறந்த மாவட்டம்.

சுத்தமான சுற்றுலாத்தலம், பல்வேறு சுற்றுலாப் பிரிவுகளின் சிறந்த ஏற்பாட்டாளர், சிறந்த சிறப்பு சுற்றுலா நிறுவனம் சிறந்த மருத்துவ மற்றும் ஆரோக்கிய சுற்றுலா நிறுவனம், உள்ளிட்ட 13 வகையான விருதுகள் வழங்கப்படுகிறது.

இந்த விருதுகளுக்கு விண்ணப்பங்கள் வருகின்ற 30ம் தேதிக்குள் (www.tntourismawards.com) என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும், கூடுதல் விவரங்களுக்கு சுற்றுலா அலுவலகம் சென்னை மற்றும் 9444823111, 8004253111, 999487234 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம்.


## 25 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



**மாஸ்டர் தமிழ்ப்பித்தன் (எ) ம.வேலுச்சாமி**

(மாநில தொண்டரணிச் செயலாளர், தி.மு.க.)

15.9.2001 அன்று கழகத் தலைவரிடம் பதக்கம் பெற்ற மகிழ்ச்சியில் திளைத்த எங்கள் இதய தெய்வத்திற்கு நினைவஞ்சலி!

மகன்

**வேல்.உமாகாந்த்** துணைச் செயலாளர்,
மாநில பொறியாளர் அணி